ஏறாவூர்பற்று பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஏறாவூர்பற்று பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 10(1) இன் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏறாவூர்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன, என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் வழிகாட்டுக்கோவைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், இலக்குகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	மீளாய்வாண்டிற்கான கொடுவாமடு திண்மக்கழிவு நிலைய கழிவு சேகரிப்பு வருமானம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 194,206 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததோடு, நிலுவை ரூபா 334,534 நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.	2025ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் தவறுகள் சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் நிலுவை என்பன சரியாக கணிப்பீடு செய்து கணக்குகளில் காட்டப்பட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2023 மற்றும் மீளாய்வாண்டில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற 2,524 எண்ணிக்கையான புத்தகங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காட்டப்பட்டிருக்கவில்லை.	இவற்றை சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	புத்தகங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	தொலைத் தொடர்பாடல் நிறுவனங்களிடமிருந்து மீளாய்வாண்டு வரை அறவிடப்பட வேண்டிய வியாபார உரிமக் கட்டணத் தொகையான ரூபா 225,000 நிதிக்கூற்றுக்களில் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இத்தவறினை சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	பெறவேண்டிய வருமானம் சரியாக கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 146,185,023 ஆன 03 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு மற்றும உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இவை தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு சீர்திருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் ஆவணங்களை திரட்டி ஏடுகளில் பதிவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) பிரிவு	சபையின் நிர்வாக எல்லைக்குள் காணப்படுகின்ற 1,065 வீதிகளில் 937 வீதிகளை வர்த்தமானி பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	இவை தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு சீர்திருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	சபையின் நிர்வாக எல்லைக்குள் காணப்படுகின்ற வீதிகளை வர்த்தமானி பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம்			
(i)	371(5)	01 தொடக்கம் 05 வருடங்களிற்கு மேலாகவுள்ள ரூபா 8,922,640 முற்பணக் கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த முற்பணம் தொடர்பாக பரிசீலனைகள் மேற்கெள்ளப்பட்டு சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii)	571(1), (2) & (3)	இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த ரூபா 3,546,030 ஆன 170 வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த வைப்புக்கள் தொடர்பில் ஆராய்ந்து 2025 ஆம் ஆண்டில் வருமானக் கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், காலங்கடந்த வைப்புக்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	2022 திசெம்பர் 23 ஆம் திகதிய உள்நாட்டு இறைவரித் திணைக்கள சுற்றறிக்கை எஸ்ஈசி /2022/ஈ/03	சுற்றறிக்கைக்கு முரணாக மீளாய்வாண்டின் போது சபையின் நிலையான வைப்பு வட்டி வருமானத்திலிருந்து இரண்டு அரச வங்கிகளினால் அறவிடப்பட்ட ரூபா 133,280 நிறுத்தி வைத்தல் வரியினை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வங்கியின் ஊடாக இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 69,024,296 ஆக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 74,514,887 தொகையாக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

வருமான மூலம்	2024 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை	2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரியும் வரியும்	2,102,000	130,850	130,850	992,082	2,004,500	1,044,706	55,200	989,506
வாடகை	12,685,000	14,274,442	14,274,442	2,362,937	15,755,000	17,021,021	14,177,491	2,843,529
உத்தரவுப் பத்திரக் கட்டணம்	4,761,000	4,058,134	4,058,134	-	4,511,000	3,421,481	3,421,481	-
ஏனைய வருமானம்	73,962,000	7,889,080	7,889,080	-	8,874,500	10,409,074	10,409,074	-
	93,510,000	26,352,506	26,352,506	3,355,019	31,145,000	31,896,282	28,063,246	3,833,035

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ) ஆதனவரி		
2020 பெப்ரவரி 28 ஆந் திகதியிடப்பட்ட 2165 ஆம் இலக்க வர்த்தமானியில் சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் 24 அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இப் பிரதேசங்களில் காணப்படும் அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றினை வரி மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இவ்விடயம் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.	பிரதேசங்களில் காணப்படும் அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றினை வரி மதிப்பீட்டிற்கு உட்படுத்தி, வீதவரியினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) வாடகை		
(i) சபைக்குச் சொந்தமான 28 கடைகளிலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 862,230 இனை 03 வருடங்களுக்கு மேலாக அறவிடுவதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக அறவீடுகளை மேற்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டது. தற்போது அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	வாடகை நிலுவையினை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii)	14 குத்தகைதாரர்களிடமிருந்து ரூபா 478,550 குத்தகை நிலுவையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-	குத்தகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	குத்தகை ஒப்பந்தத்தின் நிபந்தனை இல.03 இன் பிரகாரம், குறிப்பிட்ட கால வரையறையினுள் குத்தகைப் பணத்தினை செலுத்த தவறியிருந்த குத்தகைதாரர்களிடமிருந்து 10 சதவீத தண்டப்பணம் அறவீடு செய்யப்படல் வேண்டியிருந்தும் அத் தண்டப் பணத்தொகையினை குத்தகைப் பணம் செலுத்த தவறியிருந்த குத்தகைதாரர்களிடமிருந்து ரூபா 69,080 அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டிலிருந்து அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	உரியகாலத்தில் குத்தகைப் பணத்தினை செலுத்த தவறியிருந்த குத்தகைதாரர்களிடமிருந்து தண்டப் பணத்தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	ஐந்து வருடங்களுக்கு மேலாக அறவிடவேண்டிய களியாட்ட வரி ரூபா 992,082 வசூலிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அறவீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கபப்படும்.	அறவிடவேண்டிய களியாட்ட வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	12 எண்ணிக்கையான வாகனங்களினை திருத்தம் செய்து மீளப்பயன்படுத்துவதற்கு கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	பழுதடைந்து காணப்படும் வாகனங்களினை திருத்தம் செய்து இயங்கு நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பெயரிலுள்ள 25 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	சபையினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் உரிமையினை சுவீகரிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 செயற்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
2022 ஆம் ஆண்டில் விற்பனை நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 15,544,440 க்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அவை 2022 மே 12 ஆந் திகதியளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தும் 02 அறைகளைக் கொண்ட விற்பனை நிலையத்தின் நிர்மாணப் பணிகள் குறிப்பிட்ட காலத்தினுள் பூர்த்தியாக்குவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையினாலும், மூலப்பொருட்களின் விலையேற்றம் காரணமாகவும் ஆரம்ப அடித்தள நிர்மாணப் பணிகளுடன் குறித்த வேலைத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.	பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறையால் மேற்கொள்ள முடியவில்லை. தற்போது PSDG நிதியில் முடிவுறுத்துவதற்காக மதிப்பீட்டுக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	திட்டத்தினை உரிய முறையில் அமுல்படுத்தி எதிர்பார்க்கும் நன்மையை அடைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	2021 செப்டம்பர் 29 ஆந் திகதிய அரச நிதிச் சுற்று நிருப இல. 01/2021 இன் பந்தி 2.3(iv) இன் பிரகாரம், 11 ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்ட சனசமூக நிலையங்கள் துணை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதாக உறுதிப்படுத்தியிருந்த போதிலும், தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் சனசமூக நிலையத்தினால் சேவை முடிக்கப்பட்டதாக சான்றுபடுத்தி ரூபா 21,749,830 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது	சனசமூக நிதிப்பற்றாக்குறை தொடர்பாக வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழு கூட்டம் மற்றும் நிதிக் கொள்கையிடல் கூட்டங்கள் மூலம் திட்டங்களை நிறைவேற்றும் போது சமூக நலன் விரும்பிகள் மற்றும் தனவந்தர்கள் மூலமே சமூக அடிப்படையில் இத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டு ஒப்பந்தங்கள் சனசமூக நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன.	சனசமூக நிலையங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்கும் போது அரச நிதிச் சுற்று நிருப இல. 01/2021 இன் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	நிதி ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 2016/01 இன் பந்தி 1.2 இன் பிரகாரம் உள்ளுராட்சி அதிகார .சபைகள் வீதிகளை அமைக்கும் போதும் அவற்றை மேம்படுத்தும் போதும் அதிக காலம் பயன்படுத்தக்கூடிய கார்பட் இடுதல், தார் பே.ாடுதல் அல்லது கொங்கிரீட் இடுதல் தவிர்ந்த கி.றவல் போடுதல் அல்லது தற்காலிக பாதை அமைத்தல் தவிர்க்கப்பட வேண்டுமென கு.றிப்பிடப்பட்டிருந்த போதிலும், சபையானது இச்சுற்றறிக்கைக்கு முரணான வகையில் 32 வீத.ிகளுக்கும் சபையினால் ரூபா 66 மில்லியன் பெறு..மதியான கிறவலிடப்பட்டிருந்தது.	கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர் மற்றும் பொது மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக மணல் பாதைகளுக்கான கிறவலிடும் திட்டங்கள் முன்மொழியப்பட்டு இவ்வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன.	நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் நடைமுறைகள் பின்பற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(இ)	கொம்மாதுறை வடக்கு உள்ளக வீதியானது ரூபா 1.5 மில்லியன் ஒப்பந்த தொகையில் பிரத்தியேகமாக தோட்டம் மற்றும் சூரியபடல மின் உற்பத்தி தொழில் முயற்சியாளர்களுக்காக கிறவலிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 33 இன் பிரகாரம், வீதியினை நிர்மாணிக்கக் கோருகின்ற வேண்டுகோளின் அடிப்படையில் குறித்த வீதியினை சபைக்கு உரித்தாக்குவதற்கும், நிர்மாணம் மற்றும் பேணுகைச் செலவினை தோட்ட மற்றும் கைத்தொழில் முயற்சியாளர்களிடமிருந்து மீளப்பெறுவனவு செய்வதற்கமைவாக அவர்களுடன் ஒப்பந்தமொன்று சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இப்பிரதேசத்தில் கிழக்கு பல்கலை கழகத்தின் உப பிரிவு பீடங்களும் மக்கள் குடியமர்த்தப்பட வேண்டிய கிராமங்கள் குடியிருப்புக்கள் சிறு வியாபாரத்தளங்கள் மற்றும் மீன் வளர்ப்பு நிலையங்கள் அனைத்தும் காணப்படுவதுடன் மக்களின் நன்மை கருதி மேற் கொள்ளப்பட்டவை ஆகும்.	1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 33 இன் பிரகாரம் வீதிகள் நிர்மாணிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.5 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
சபையின் கட்டத்தின் கூரையில் சூரியபடல மின்சக்தி (Solar Power) நிறுவும் திட்டத்தை செயல்படுத்த ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. மேலும் சபைக்கு 6% தொடக்கம் 18% வரை வருமானம் கிடைக்கக்கூடியதாக இருந்தது. இத் திட்டத்தை சபைநிதியை பயன்படுத்தி செய்திருந்தால் சபையினால் முழு வருமானத்தையும் பெற்றிருக்கலாம். எனினும், சபை அந்த வாய்ப்பை இழந்து விட்டது என்பதனை கணக்காய்வில் அவதானிக்க முடிந்தது	சபையின் நிலையான வைப்புக்களோ மற்றும் வருமானங்களையோ பயன்படுத்தி இவ்வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படவில்லை. கட்டடங்கள் மாத்திரம் வழங்கப்பட்டு வருமானமீட்டும் நோக்குடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.	சபையின் பொதுமக்களின் நலன் கருதியும் மற்றும் சட்டதிட்டங்களுக்கு இணங்க ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, 07 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்க்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் சபையினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பலவீனமான முறையில் காணப்பட்டிருந்தன.	இவ்விடயம் தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	சபையில் கடமையாற்றி இளைப்பாறிய மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு ஊழியர்களின் கடன் நிலுவையான ரூபா 106,731 இனை 08 வருடங்களுக்கு மேலாகவும், பதவி வெறிதாக்கப்பட்ட மூன்று ஊழியர்களின் கடன் நிலுவையான ரூபா 462,760 இனை 02 ஆண்டுகளுக்கு மேலாகவும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த உத்தியோகத்தர்கள் மற்றும் கடமையாற்றும் அலுவலகங்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	ஊழியர் கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
2019 சனவரி 12 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இல. DMA/01-2019 இன் பந்தி 6 இன் பிரகாரம், மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு திட்டமொன்று சபையில் காணப்பட்டிருக்கவில்லை. மேலும், சபையில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளும் இடம்பெற்றிருக்கவில்லை.	உள்ளகக் கணக்காய்வு திட்டமொன்று இந்நிதியாண்டில் செயற்படுத்தப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம், உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
வழங்கு பொருட்களும் தேவைப் பொருட்களும் மற்றும் ஆக்கப்பொருள் போன்ற 24 செலவினங்களுக்காக மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபா 1,570,000 நிதியானது, பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. இச்செயற்பாடானது, வரவுசெலவு திட்டம் வினைத்திறனற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டுகின்றது.	பதிலளிக்கப்படவில்லை.	வரவுசெலவுத் திட்டமானது வினைத்திறனாக தயாரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.3 சுற்றாடல் பிரச்சினை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கிணங்க 76 தொழில் நிறுவனங்களுக்கு காலாவதியான சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	,J njhlu;ghf eltbf;if vLf;fg;gl;L tUfpd;wJ.	சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.